

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 8.9.2024 அன்று சிகாகோவில், அமெரிக்க நாட்டிலுள்ள பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டில் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெற வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, திருமதி. துர்கா ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 8.9.2024 அன்று சிகாகோவில், அமெரிக்க நாட்டிலுள்ள பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டில் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெற வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, திருமதி. துர்கா ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உடனிருந்தனர்.

### பள்ளிக் கல்விக்கான ஒருங்கிணைந்த திட்டத்திற்கு (எஸ்.எஸ்.ஏ.) நிதி வழங்க மறுப்பு!

# தமிழ்நாட்டை வஞ்சிக்காதீர்!

## ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, செப். 10-

பள்ளிக்கல்விக்கான ஒருங்கிணைந்த (எஸ்.எஸ்.ஏ.) திட்டத்தின் கீழ் நிதி தராமல் தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்று ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.


பள்ளிக்கல்விக்கான ஒருங்கிணைந்த திட்டம் என்று சொல்லப்படும் சமாக்ரா சிக்ஷா திட்டத்தின் (எஸ்.எஸ்.ஏ.) கீழ் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு முறையான வழிமுறையை கையாளாமல் பாரபட்சம் காட்டுகிறது என்பதோடு, எடுத்துக்காட்டாக செயல்படும் தமிழ்நாடு உள்ளிட்ட ஒரு சில மாநிலங்களுக்கு குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு அல்லது முற்றிலும் நிதி மறுப்பது என செயல்படுகிறது என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் நேற்று செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

இந்தக் கட்டுரையை மேற்கோள் காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘ஒன்றிய அரசின் இந்த முடிவை நாட்டுக்கும் நாட்டு மக்களின் புரிதலுக்குமே விட்டு விடுகிறேன்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ‘தி இந்து’வில் வெளியான கட்டுரை வருமாறு:-

கடந்த ஆண்டில், தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் டெல்லி ஆகிய ஐந்து எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு சமக்ரா சிக்ஷா திட்டத்தின் (எஸ்.எஸ்.ஏ.) நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

SSA என்பது பள்ளிக் கல்வித் துறைக்கான ஒரு விரிவான திட்டமாகும். எஸ்.எஸ்.ஏ.வின் முடிவுகளை விட, “முன்மா



Samagra Shiksha fund delay punishes role-model States

Top rankers denied funds

திரியான மாதிரிப் பள்ளிகளை, மற்ற பள்ளிகளுக்குத் தலைமை தாங்கும்” வளர்ச்சியை இலக்காகக் கொண்ட PM ஸ்ரீ திட்டத்தை ஏற்றுக்கொள்வதில் மையத்தின் முடிவு அதிகம் என்று தரவு காட்டுகிறது. சில சந்தர்ப்பங்களில், தேசியக் கல்விக் கொள்கையை முழுவதுமாக ஏற்க விரும்பாததும் ஒரு காரணமாகும்.

கல்வி உரிமையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கட்டணம் SSA நிதியைப் பொறுத்தது. இந்த மாநிலங்களில் ஆசிரியர்களுக்கான சம்பள தாமதமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதிச் சுமை காரணமாக, கேரளாவும் பஞ்சாப்பும் மனந்திரும்பின, டெல்லியும் மையத்தின் நிபந்தனைகளை ஏற்கலாம்.

நிதியை தாமதப்படுத்துவதன் மூலம், சமூக மற்றும் பாலின இடைவெளிகளைக் குறைத்தல், பள்ளிக் கல்வியில் சமத்துவம் மற்றும் சேர்க்கையை உறுதி செய்தல், தொழிற்கல்வியை ஊக்குவித்தல், உறுதி செய்தல் போன்ற SSA இன் முக்கிய நோக்கங்களை அடைவதில் முன்னணியில் இருக்கும் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அபராதம் விதித்துள்ளது.

பள்ளி ஏற்பாடுகள் மற்றும் பயிற்சி ஆசிரியர்களுக்கு. SSA இன் 20 நோக்கங்களில் 22 முக்கிய மாநிலங்களை வரைபடம் ஒப்பிடுகிறது. அனைத்து 20 நோக்கங்களிலும், கேரளா பட்டியலில் முதல் பாதியில் (சிறந்த 11 மாநிலங்கள்) உள்ளது, பலவற்றிலும் முன்னணியில் உள்ளது. 19 இலக்குகளில் தமிழகம் முதல் பாதியில் உள்ளது. 18 இலக்குகளில் டெல்லி முதல் பாதியிலும், மேற்கு வங்கம் 15 இலக்குகளிலும் உள்ளன. பஞ்சாப் 12 இலக்குகளில் முதல் பாதியில் உள்ளது.

நிதியைப் பெற்ற மாநிலங்களில், 20 நோக்கங்களில் எட்டு நோக்கங்களுக்காக குஜராத் முதல் பாதியில் உள்ளது. உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் தலா மூன்று நோக்கங்களுக்காக முதல் பாதியிலும், பீகார் இரண்டு இலக்குகளிலும் உள்ளன.

இவ்வாறு ‘தி இந்து’வில் கட்டுரை வெளியாகி உள்ளது.

இதை மேற்கோள் காட்டி SSA திட்டத்திற்கு நிதியினை ஒதுக்கீடு செய்யாமல் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதியை மறுப்பது, அதேவேளையில் குறிக்கோள்களில் வெற்றியடையாதோருக்குத் தாராளமாக நிதி ஒதுக்குவது இப்படித்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு தரமான கல்வியையும் சமத்துவத்தையும் ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளதா?**

**முடிவை நாட்டுக்கும், நாட்டு மக்களின் புரிதலுக்குமே விட்டுவிடுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ஒட்டப்பிடாரம் – திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதிகளில்

# கனிமொழி கருணாநிதி எம்.பி.வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

*தூத்துக்குடி, செப். 10 -*

*நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற கனிமொழி கருணாநிதி எம்.பி. கீழ்க்காணும் தேதிகளில் வாக்காளர்களை நேரடியாக சந்தித்து நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.*

*இன்று (10.09.2024 செவ்வாய்க்கிழமை) ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் மாலை 5 மணி பழையகாயல், 5.30 மணி முக்காணி, 5.50 மணி உமரிக்காடு, 6.10 மணி காந்தி சிலை ஏரல், 6.40 மணி*



*சாயர்புரம் பஜார், இரவு 7.00 மணி பண்டாரவிளை, 7.20 மணி சிவகளை, 7.40 மணி பேட்மாநகரம், 8.00 மணி பேரூர் ஆயத்துரை, 8.30 மணி ஸ்ரீவைகுண்டம் பேரூர் நாலுமுக்கு ரோடு, 9.00 மணி தோழப்பன் பண்ணை ஆகிய ஊர்களிலும்,*

*11.09.2024 புதன் கிழமை ஸ்ரீவைகண்டம் சட்டமன்ற தொகுதியில் மாலை 5.00 மணி ஆழ்வார்திருநகரி காமராஜர் சிலை அருகில், 5.30 மணி செம்பூர், 5.50 மணி வெள்ளமடம், 6.20 மணி சின்னமாடன் குடியிருப்பு, 6.50 மணி பழனியப்பபுரம், இரவு 7.10 மணி பேய்க்குளம், 7.40 மணி ராமானுஜம் புதூர், 8.00 மணி கால்வாய், 8.30 மணி கருங்குளம், 9.00 மணி செய்துங்கநல்லூர் ஆகிய ஊர்களிலும் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.*

*இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட ஒன்றிய, பகுதி செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

### அமெரிக்காவில் இருந்தாலும் தாய்வீடான தமிழ்நாடு பற்றியே என் மனது சிந்திக்கும்

# முன்மொழிந்த வார்த்தைகளை அப்படியே சிரமேற்கொண்டு நிறைவேற்றி வருகிறார் முதல்வர்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 10–

அமெரிக்காவில் இருந்தாலும் தாய்வீடான தமிழ்நாடு பற்றியே என் மனது சிந்திக்கும் பார்வை கண்காணிக்கும் என அமெரிக்கா செல்வதற்கு முன் முன்மொழிந்த வார்த்தைகளை அப்படியே சிரமேற்கொண்டு நிறைவேற்றி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 17 நாள் பயணமாக அமெரிக்காவிற்கு சென்றுள்ளார். அங்கு அயலக தமிழர்களையும், முக்கிய முதலீட்டாளர்களையும் சந்தித்து தமிழ்நாட்டின் நலன்களை கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். சென்னை மற்றும் கோவையில் மின்னணு உற்பத்தி மையம் நிறுவிட புரிந்து ணர்வு ஒப்பந்தம், அமெரிக்காவில் உள்ள உலகளாவிய நிறுவனங்களுடன் பல ஆயிரம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் என நாள்தோறும் தொழில்நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை போட்டு, தொழில் முதலீடுகளை ஈர்த்து வருகிறார். தொழில் முதலீடுகள், முதலீட்டாளர்கள் சந்திப்புகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என தொடர்ச்சியான பணிகளுக்கு மத்தியிலும், அமெரிக்காவில் இருந்து கொண்டே அரசு பணிகளையும் இ–ஆபீஸ் வழியே மக்கள் முதல்வர் மேற்கொள்வதுதான் சிறப்பாகும். பொதுவாக அரசு அலுவலகங்களில் ஒரு அதிகாரி ஒரு வாரம் விடுப்பில் சென்றுவிட்டாலே, அலுவலக கோப்புகள் அப்படியே தேங்க ஆரம்பித்து விடும். ஆனால் அமெரிக்காவில் இருக்கும் முதல்வருக்கோ, தமிழ்நாட்டு மக்கள் மீதே சிந்தனை இருப்பதால், இ–ஆபீஸ் நடைமுறையில் இரவு நேரங்களில் தமிழக அரசின் கோப்புகளை தினமும் பார்வையிட்டு, கையெழுத்து இட்டு வருகிறார்.

அயலக மண்ணில் இருந்தாலும் அரசு கோப்புகள் தமிழ்நாட்டில் தேங்கி விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், அங்கிருந்து கொண்டே இ–ஆபிஸ் வழியே மக்கள் பணியை முதல்வர் ஆற்றி வருகிறார். இது மட்டுமின்றி, தமிழ்நாட்டில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் அன்றைய தினமே கண்காணித்து, அதற்கான தீர்வுகளை இரவே அதிகாரிகளுடன் கலந்து



தினகரன்

செப்டம்பர் 9, 2024 திங்கட்கிழமை

எண்ணமெல்லாம் இங்கேதான்

தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் 17 நாள் பயணமாக அமெரிக்காவிற்கு சென்றுள்ளார். அங்கு அயலக தமிழர்களையும், முக்கிய முதலீட்டாளர்களையும் சந்தித்து தமிழ்நாட்டின் நலன்களை கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். சென்னை மற்றும் கோவையில் மின்னணு உற்பத்தி மையம் நிறுவிட புரிந்துணர்வு ஒப்பந்தம், அமெரிக்காவில் உள்ள உலகளாவிய நிறுவனங்களுடன் பல ஆயிரம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் என நாள்தோறும் தொழில்நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை போட்டு, தொழில் முதலீடுகளை ஈர்த்து வருகிறார். தொழில் முதலீடுகள், முதலீட்டாளர்கள் சந்திப்புகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என தொடர்ச்சியான பணிகளுக்கு மத்தியிலும், அமெரிக்காவில் இருந்து கொண்டே அரசு பணிகளையும் இ- ஆபீஸ் வழியே மக்கள் முதல்வர் மேற்கொள்வதுதான் சிறப்பாகும். பொதுவாக அரசு அலுவலகங்களில்

பேசி தெரிவித்து வருகிறார். சென்னை அசோக்நகர் மேல்நிலைப் பள்ளியில் மூடநம்பிக்கை பேச்சாளர் மகாவிஷ்ணு பேசியதால் சர்ச்சை எழுந்தது. இதுகுறித்த முழு விவரங்களையும் தெரிந்து கொண்டு, பள்ளி நிகழ்ச்சிகளுக்கான புதிய வழிகாட்டி வழிமுறைகளை வெளியிட்டார். மாணவர்களுக்கு அறிவியல் சிந்தனைகள் அவசியம் என அதில் தெரிவித்திருப்பதோடு, தனிமனித முன்னேற்றம், அறநெறி சார்ந்த வாழ்வு, சமூக மேம்பாட்டுக்கான சீரிய கருத்துகள் மட்டுமே மாணவர்கள் மத்தியில் விதைக்கப்பட வேண்டும் என அந்த உத்தரவில் அறுதியிட்டு கூறியுள்ளார்.

பொதுவாக தனி மனிதர் தொடங்கி, அரசு அதிகாரிகள், குழுக்கள் என பெரும்பாலானோரின் வெளிநாட்டு பயணங்களில், பல இடங்களை ஜாலியாக சுற்றி பார்த்திடும் எண்ணமே மேலோங்கி நிற்கும். வெளிநாடுகளில் உள்ள சுற்றுலா தலங்கள், ஏரிகள், பூங்காக்கள், அருங்காட்சியகங்கள், கடற்கரைகள், தீவுகள் அவற்றை சுற்றி பார்த்து விட்டு, பொழுது போக்குவதாகவே அமையும். ஆனால் மக்கள் முதல்வரான மு.க.ஸ்டாலின் அவர்களின் அயலக பயணத்தில் எப்போதுமே தமிழ்நாடுமக்கள் பற்றிய எண்ணங்களே ஓடிக் கொண்டிருக்கிறது. முதலீடுகளை ஈர்ப்பது ஒருபுறம், தமிழ்நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை நாள்தோறும் கண்காணிப்பது மறு புறமாக இருக்கிறது.

தமிழகத்திற்கு என்னென்ன புதிய திட்டங்கள் தேவை என்பதை அறிந்து கொண்டு, அதற்கேற்ப அமெரிக்காவில் உள்ள தொழில் நிறுவன முதலீட்டாளர்களை சந்தித்து பேசி ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறார். புலம்பெயர்ந்த தமிழர்களை சந்தித்து பேசி, அவர்களது கவனத்தையும் முதல்வர் ஈர்க்க தவறவில்லை. ‘அமெரிக்காவில் இருந்தாலும் தாய்வீடான தமிழ்நாடு பற்றியே தான் என் மனது சிந்திக்கும். பார்வை கண்காணிக்கும்’ என அமெரிக்கா செல்லும் முன்பு முதல்வர் முன்மொழிந்த வார்த்தைகளை அப்படியே சிரமேற்கொண்டு நிறைவேற்றி வருகிறார்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பல கனவுகளில் வாழ்பவர்கள்

# காழ்ப்புணர்ச்சியின் காரணமாக முதல்வரை விமர்சிக்கிறார்கள்!

## சிவகங்கையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

*சிவகங்கை. செப். 10-*

*சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு திருமண நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை புரிந்த கனிமொழி கருணாநிதி எம்.பி. ஒக்கூரில் செய்தியாளர்களிடம் கூறியதா வது.*

*விளம்பரத்திற்காகவும், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் பின்தங்கி உள்ளதாக பா.ம.க. தலைவர் அன்புமணி ராம்தாஸ் குற்றச்சாட்டு கூறி உள்ளார்.*

*இதற்கு கனிமொழி கருணாநிதி எம்.பி.கூறியதாவது:-*



*நடக்க முடியாத, நிறைவேறாத பல கனவுகளை வைத்திருப்பவர்கள் முதல்வர் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியினால் விமர்சனம் செய்து வருகிறார்கள். முதல்வராக தளபதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பு ஏற்ற மூன்று ஆண்டுகளில் பல்வேறு முதலீடுகளை வெளிநாடுகளுக்கு சென்று ஈர்த்துள்ளார்.*

*தற்போது அமெரிக்கா சென்று பல முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார். அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முன்னேறிய மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இதை பொறுத்துக் கொள்ள முடியாத பா.ம.க .தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தவறான கருத்துக்களை கூறி வருகிறார்கள். இது மக்களிடம் எடுபடாது.*

*இவ்வாறு கனிமொழி எம்.பி. கூறினார்.*

*பேட்டியின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.*

*முன்னதாக மதுரையில் இருந்து கார் மூலம் சிவகங்கை வருகை தந்த கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலை யில் திருமதி தமிழரசிரவிக்குமார் எம் .எல். ஏ .மாவட்ட கழக துணைச் செயலாளர் தா. சேங்கை மாறன் ,சிவகங்கை நகர் கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, தெற்கு ஒன்றிய செயலாளர் எம். ஜெயராமன் தலைமையில் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் வரவேற்றார்கள்.*





தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் , மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விழாவினை துவக்கி வைத்தார்.இதனை தொடர்ந்து இராமநாதபுரத்தில் தனியார் மகாலில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடை பெற்றது. இந்த நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மக்களவை உறுப்பினர் கே நவாஸ் கனி, பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ முருகேசன். திருவாடானை சட்டப் பேரவை உறுப்பினர் கரு.மாணிக்கம். மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திசைவீரன், இராமநாதபுரம ஊராட்சி ஒன்றிய தலைவர் பிரபாகரன், நகர் மன்ற தலைவர் ஆர் கே கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### ஆங்கிலப் பெரும் பேராசிரியர் – தலைசிறந்த மொழி பெயர்ப்பாளர்

# பேராசிரியர் கா.செல்லப்பன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, செப். 10-

ஆங்கிலப் பெரும் பேராசிரியரும், தலைசிறந்த மொழிபெயர்ப்பாளருமான பேராசிரியர் கா. செல்லப்பன் அவர்கள் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-



ஆங்கிலப் பெரும் பேராசிரியரும் தலைசிறந்த மொழிபெயர்ப்பாளரும் ஒப்பிலக்கியத்தின் திறனாய்வுச் சுடராகவும் நூற்றுக்கணக்கான மாணவச் செல்வங்களுக்கு வழிகாட்டியாகவும் ஆங்கில இலக்கியத் துறையில் மங்காப் புகழ் கொண்டவராகவும் விளங்கிய பேராசிரியர் கா. செல்லப்பன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன். அன்னாரது மறைவு தமிழ், ஆங்கில இலக்கிய உலகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு!

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் ஆசிரியப் பணியைத் தொடங்கி, திருச்சியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆங்கில இலக்கியத் துறையின் தனிப் புகழ்த் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் செல்லப்பன் அவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை பெற்றவர். எண்ணற்ற ஒப்பியல் நூல்களை எழுதியவர், மொழி பெயர்த்தவர். நான்கு தலைமுறைகளை உருவாக்கியவர்.

தமிழ்நாட்டில் முதன் முறையாக இங்கிலாந்து, அமெரிக்க நாட்டு ஆங்கில கவிஞர்கள் பட்டியலில் ஆஸ்திரேலிய நாட்டுக் கவிஞர்களை அறிமுகம் செய்த பெருமை இவரையே சாரும். ஷேக்ஸ்பியரையும் இளங்கோவடிகளையும் ஒப்பியல் செய்து பெரும் படைப்பினைப் படைத்தவராவார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் குறளோவியம், தென்பாண்டிச் சிங்கம், மீசை முளைத்த வயதில் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த சிறப்புக்கும், மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெரும் சிறப்புக்கும் உரியவராவார்.

இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் நாவலான ‘கோரா’வின் மொழிபெயர்ப்பிற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். மேலும் தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக 2006ஆம் ஆண்டுக்கான பாரதிதாசன் விருதையும், 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதையும் பெற்றவர்.

இத்தனை சிறப்புகளை ஒருங்கே கொண்டிருந்த மாபெரும் அறிஞரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், மாணவர்களுக்கும், அறிவுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.